**OS No.7/2024**

PW 1 - மலைக்கண்ணு

நாள் 03.02.2026

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

சர்வே எண் 131/19 ஏ – க்கு வழக்கு போடப்பட்டுள்ளது. தாவா சொத்தில் என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் டிரான்ஸ்பாரம் என் இடத்தில் வைக்கக்கூடாது என்று பரிகாரம் கேட்டுள்ளேன்.

வழக்கு தாக்கல் செய்துள்ள இடம் நஞ்சை நிலம் தான். அந்த நஞ்சை நிலத்தில் தான் நான் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன். உங்கள் கிராமத்தில் பலதரப்பட்ட சமூதாய மக்கள் இருந்து வருகிறார்கள். சோனைத்தேவன், வீரையா, கணேசன், முருகேசன், பாஸ்கரன், காசிராஜன் ஆகியோர்கள் எங்கள் கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான்.

சோனைத்தேவன், வீரையா, கணேசன், முருகேசன், பாஸ்கரன், காசிராஜன் ஆகியோர்கள் சமூகம் நீதிமன்றத்தில் வழக்கு எண் 42/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கில் எனது வீட்டின் மேல் மின் அழுத்த கம்பி செல்வதை இடம் மாற்றம் செய்ய மின்கம்பம் ஊண்டுவதற்கு நான் மனு செய்தேன் என்றால் சரிதான். அதற்கு ரூபாய் 25000/– ஐ கட்டியுள்ளேன்.

நீங்கள் சொல்லக்கூடிய இடம் பொது வீதி என்றும், பொது மக்கள் உயிர்சேதம் ஏற்படும் என்றும் அதனால் மின்கம்பம் ஊண்டக்கூடாது

என்றும் சோனைதேவன் வகையறா வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது என்னுடைய பட்டா இடம்.

சர்வே எண் 131/19 ஏ – ல் வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் 1 ¼ செண்ட் பட்டா உடைந்துள்ளது. மேற்படி வருவாய் துறை சர்வே எண் சரியாக ஞாபகமில்லை. நீங்கள் வாங்கிய இடம் என் தந்தையார் ராமசாமிதேவர் என்பவரிடம் வாங்கினார் என்றால் சரிதான். 1974 ல் வாங்கினார்.

1974 ல் வாங்கியபின்பு பட்டா மாறுதல் நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுக்கவில்லை. அப்பா சொத்து என்பதால் எடுக்கவில்லை. 1974 ல் தாவா சொத்திற்கு அருகில் சமுதாய கிணறு இருந்தது என்றால் இல்லை. உங்கள் தந்தையாரிடம் இருந்து தான் 1 ¼ செண்ட் இடத்தை மானாமதுரை பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் என்ற பெயரில் யூ.டி.ஆர் காலகட்டத்திலேயே பதிவு ஏற்பட்டுள்ளது என்றால் அந்த விபரம் எனக்குத் தெரியாது. 2021 ல் தான் தெரியும்.

சர்வே எண் 131/19 ஏ – இன்று வரையில் என் தந்தையார் பெயரில் தான் உள்ளது சொத்து எனக்குரியது. நீங்கள் தாவாச் சொத்தில் கிராமத்திற்காக டிரான்பாரம் அமைக்கக்கூடாது என்று மாண்பமை உயர் நீதிமன்றத்தில் வழக்கு போட்டுள்ளேன் என்றால் ஆமாம். அந்த வழக்கு தள்ளுபடி ஆகீவிட்டது என்றால் சரிதான். வருவாய் கோட்டாட்சியரிடம் சரிசெய்ய அறிவுறுத்தப்பட்டது.

தாவா சொத்து சம்பந்தமாக வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நீங்கள் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் சமூகம் நீதிமன்றத்தில் சென்று பார்த்துக்கொள்ளுமாறு வழக்கை முடித்துவிட்டார்கள் என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு நாங்கள் அங்கு போகவில்லை.

நீங்கள் உங்கள் தந்தையார் தாவா சொத்தை வாங்கிய பின்பு தாவா சொத்தில் முள்வேலி அமைத்து கல்கால் ஊண்டி அனுபவம் செய்து

வருகிறேன் என்றால் சரிதான். நீங்கள் அனுபவம் செய்து வரும் இடத்தில் அரசு அதிகாரிகள் எந்த இடையூறும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். எதிர்தரப்பினர் சோனைத்தேவன் வகையறா தான் இடையூறு செய்து வருகிறார்கள்.

அவர்களை எதிர்த்து நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். அவர்களையும் இந்த வழக்கில் சேர்த்து விசாரணை செய்தால் தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது என்ற உண்மைத்தன்மை தெரியவரும் என்றால் சரியல்ல. நீங்கள் மின் கம்பம் அமைக்க பணம் கொடுத்த பின்பு மின்சார துறையில் இருந்து வந்தார்கள். அவர்கள் தரப்பில் உங்களுக்கு முழு ஒத்துழைப்பும் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

இன்று வரையிலும் நீங்கள் சொல்லக்கூடிய இடத்தில் மின்கம்பம் ஊண்டுவதற்கு தயாராகத் தான் உள்ளார்கள் வழக்கு நிலுவையில் இருப்பதால் நீங்கள் மனு தாக்கல் செய்யும் போதே தாவா சொத்தில் எந்தவித வில்லங்கம் ஏற்பட்டால் அந்த வில்லங்கத்தை நிவர்த்தி செய்ய நானே நடவடிக்கை மேற்கொள்வேன் என்று உறுதிமொழி அளித்ததன் பேரில் வழக்கு முடியும் வரை துறை சார்ந்த பணிகள் மேற்க்கொள்ள முடியாது என்பதால் மேற்படி மின்கம்பம் அமைக்க முடியாது என்று சொன்னார்கள் என்றால் சரியல்ல.

தாவா வழக்கு சொத்து 1 ம் பிரதிவாதியின் பெயரில் யூ.டி.ஆர் – ல் பட்டா பதிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது மேற்படி பட்டா பதிவு கிராம பொதுமக்களின் நலனுக்காக சமுதாய கிணறு அமைப்பதற்காக உங்களுடைய தந்தையாரின் சம்மதத்தில் பேரில் சமுதாய கிணறுக்கு பட்டா ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல.

உங்கள் தந்தையார் பெயரில் இறப்புச் சான்றிதழ் வெள்ளைக்கோன் என்று தான் பதிவு செய்யப்பட்டுள்ளது. புல எண் 131/20 ல்

தான் வீடு கட்டி அனுபவம் செய்து வருகிறீர்கள் என்றால் சரிதான். அந்த இடம் நத்தம் நிலமாகும். நீங்கள் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் புல எண் 131/20 ல் வீடு கட்டி குடியிருந்து வருகிறேன் என்று சொல்லவில்லை என்றால் தெரியவில்லை.

புல எண் 131/20 இடத்திற்கு அரசு அதிகாரிகள் இடையூறு செய்யவில்லை என்றால் சரிதான். நான் ராமசாமிதேவரிடம் கிரயம் வாங்கிய சொத்து நஞ்சை நிலம் என்றால் சரிதான். வீடும், விவசாய இடமும் தனித்தனியாக உள்ளதா என்றால் ஒன்றாக உள்ளது.

நீங்கள் பரிகாரம் கேட்டுள்ளது புல எண் 131/19 ஏ, நீங்கள் குடியிருப்பது புல எண் 131/20 அதனால் எந்த புல எண்ணில் அனுபவம் செய்து வருகிறீர்கள் என்று தெளிவான ஆவணங்கள் மூலம் நிரூபணம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

சோனைதேவன் வகையறாவினர் டிரான்ஸ்பாரம் அமைப்பதற்கு வந்தார்கள் என்றால் சரிதான். உங்களுக்கு பாத்தியப்பட்ட 20 செண்ட் இடத்தில் முள்வேலி போட்டுள்ளேன் என்றால் கொஞ்சம் போட்டும் போடமலும் உள்ளேன். நீங்கள் முள்வேலி அமைத்த இடத்திற்குள் டிரான்ஸ்பாரம் அமைக்க வந்தார்களா என்றால் எனக்கு பாத்தியமான 20 செண்ட் இடத்தில் டிரான்ஸ்பாரம் அமைக்க வந்தார்கள்.

நீங்கள் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் நான் ஓட்டுவீடு கட்டி குடியிருந்து வந்ததுடன் தாவா சொத்துக்கள் முழுவதையும் சுற்றி கல்கால்கள் ஊண்டி முள் வேலி அமைத்தும் தாவா சொத்துக்கள் முழுவதையும் அமைதியான முறையில் சட்டகாலத்திற்கு மேலாகஅனுபவம் செய்து வருகிறேன் என்று சொல்லியூள்ளீர்கள் என்றால் தவறு. எல்லா இடமும் 20 செண்டிற்கு உட்பட்ட சொத்து ஆகும்.

தாவா சொத்தை நீதிமன்றம் மூலமாக நீதிமன்ற ஆணையாளர் மூலம் அளவீடு செய்ய எவ்வித முயற்சி எடுத்தீர்களா என்றால்

இல்லை. ஏற்கனவே சர்வேயருக்கு பணம் கட்டி இடத்தை அளந்தேன். எல்லா ரசீதுகளும் உள்ளது. தாவா சொத்தை வருவாய் துறை அதிகாரிகள் மூலம் அளவீடு செய்யவில்லை அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில்தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

சோனைதேவன் வகையறாவினர் தாக்கல் செய்துள்ள வழக்கு இன்றுவரையில் நிலுவையில் இருந்து வருகிறாதா என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. உங்களுக்கு அந்த வழக்கு பற்றி தெரியும் அவர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கிற்கு எதிராக தங்களுடைய அதிகாரத்தை பயன்படுத்தி அரசு அதிகாரியை பழிவாங்கவேண்டும் என்பதற்காக தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

எனது மகன் காவல் துறையில் வேலை செய்கிறார் என்றால் சரிதான். புல எண் 131/19 பி என்பது அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்து அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. நீங்கள் முறையாக ஆவணங்களின் அடிப்படையில் நில அளவீடு செய்யாமல் பட்டா மாறுதல் தவறாக ஏற்பட்டதாக வழக்கு தாக்கல் செய்து பரிகாரம் கோருவது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

-Sd-

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

-Sd-

**District Munsif,**
**Manamadurai.**